**வட மாகாணக் கல்வித் திணைக்களமும்**
**அமலமரித் தியாகிகளின் சுகவாழ்வு நிலையமும்**
**இணைந்து LEBARA நிறுவனத்தின்**
**அனுசரணையுடன் நடாத்தும்**
**பயிற்சிப் பரீட்சை - 2016**

Lebara foundation

WHC

OMI

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

**6**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ....................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- ✸ உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- ✸ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- ✸ இவ்வினாத்தாளில் 54 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக
- ✸ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- ✸ விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ✸ செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

**01. பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களிற்கு விடை எழுதுக.**

*உடலின் உறுதி உடையவரே*
*உலகில் இன்பம் உடையவராம்;*
*இடமும் பொருளும் நோயாளிக்கு*
*இனிய வாழ்வு தந்திடுமோ?*

*சுத்தமுள்ள இடமெங்கும்*
*சுகமும் உண்டு; நீ அதனை*
*நித்தம் நித்தம் பேணுவையேல்,*
*நீண்ட ஆயுள் பெறுவாயே.*

1. *நீண்ட ஆயுள் பெறுவதற்கு யாது செய்ய வேண்டும்?*

..............................................................................................................................................

2. *உலகில் இன்பம் உடையவர் யார்?*

..............................................................................................................................................

3. *மகிழ்ச்சி என்பதன் ஒத்தகருத்துச் சொல்லைப் பாடலில் இருந்து தெரிந்து எழுதுக.*

..............................................................................................................................................

4. *இப்பாடலில் வந்துள்ள அடுக்குத்தொடரை எழுதுக.*

..............................................................................................................................................

5. *முன்னிலை ஒருமைப் பெயர்ச்சொல்லை எழுதுக.*

..............................................................................................................................................

6. *சுகதேகி எனும் சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.*

..............................................................................................................................................

*(6 x 1 = 6 புள்ளி)*

**02. அ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. *தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் .................................................. நிறுத்தம் செய்தனர். (வேலை, வேளை)*
2. *மழை வெள்ளம் எங்கும் ...................................................................... பாய்ந்தது. (பரந்து, பறந்து)*

**ஆ) கீழே தரப்பட்ட சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1. *அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா : ..................................................................*
2. *பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் : ..............................................................................*
3. *அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் : ..........................................................................*

*(5 x 1 = 5 புள்ளி)*

சுட்டெண் :..................


**03. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**


*1. Please give me a pen.* ........................................................................................

*2. Good evening.* ........................................................................................

*(4 புள்ளிகள்)*

**04. உருவிற்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

*1.*  ..............................................

*2.*  ..............................................

*(2 புள்ளி)*

**05. அ) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

*1. தாத்தா ஆவா* (Dh) *த?* ........................................................................................

*2. அ (ப்) பி பாசலட்ட யமு* ........................................................................................

**ஆ) பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்குரிய சிங்கள உச்சரிப்பைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

*1. ஆசிரியர் :* ..............................................

*2. பட்டம் :* .............................................. *(4 புள்ளி)*

**06. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

| | | | |
|---|---|---|---|
| *1.* | I. *செய்நன்றி.* | II. *செய்ந்நன்றி.* | III. *செல்நன்றி* |
| *2.* | I. *கத்தரிக்கோல்* | II. *கத்திரிக்கோல்* | III. *கத்தரிக்கோள்* |
| *3.* | I. *எண்ணை* | II. *என்ணெய்* | III. *எண்ணெய்* |

*(3 புள்ளி)*

**07. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.**

*1. அறை கூவுதல் :* ......................................................

*2. முகம் மலர்தல் :* ...................................................... *(4 புள்ளி)*

**08. பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.**

*1. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.* ........................................................................

*2. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.* ........................................................................................

*(4 புள்ளி)*

❖ **வினா 9 இலிருந்து 38 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

09. வித்துக்களை நீக்கிய பின் உணவாக உட்கொள்ளும் காய்

1. பூசணி 2. அன்னாசி 3. பயற்றை 4. வெண்டி

10. ஔடத பானத்திற்குப் பயன்படும் பூ.

1. கத்தரி 2. வெண்டி 3. பொன்னாவரை 4. பூவரசு

11. "சூழலின் ஒலிகளைச் செவிமடுங்கள், தூரத்தே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள்" இது தியானப் பயிற்சியில் எத்தனையாவது படியாகும்?

1. படி 1 2. படி 2 3. படி 3 4. படி 4


12. ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணி

1. கடலாமை 2. இறால் 3. நண்டு 4. கடற்குதிரை

13. எமது நாட்டுக்குரித்தான பிராணிகளில் ஒன்று

1. அழகிய சொர்க்கம் 2. மான் 3. கிவி 4. பண்டா

14. அருகில் காட்டப்பட்டுள்ள நட்சத்திரக் கோலத்தைக் குறிக்கும் பெயர் யாது?



1. கலப்பை 2. தென்சிலுவை 3. தேள் 4. ஓராயன்

15. எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவைகள் கொண்ட தொகுதி

1. கல்வி, சுகாதாரம் 2. போக்குவரத்து, கல்வி

3. சுகாதாரம், மின்சாரம் 4. போக்குவரத்து, மருத்துவம்

16. நீரினால் பரவும் வித்துக்கள் அடங்கிய கூட்டம்

1. சீதேவியார் செங்கழுநீர், தேங்காய், வெடிபலவன்
2. கடல்மாங்காய், தாமரை, தேங்காய்
3. துத்திரி, நாயுருவி, பருத்தி
4. எண்ணை, எருக்கலை, ஆடையொட்டி

17. பிராணிகளின் உருவங்கள் செய்யப் பயன்படும் வித்து.

1. பனங்காய் 2. பலா 3. மாங்காய் 4. கச்சான்

18. சிங்கள மக்களின் திருமணப் பழக்க வழக்கங்களில் ஒன்று

1. மணமகனை கால் கழுவி வரவேற்றல்
2. புதுமணத் தம்பதிகளுக்கு கையில் நீர் வார்த்தல்
3. மருத்துநீர் வைத்து நீராடுதல்
4. தமது உடலை வுளு செய்தல்

19. பழைய கற்பாலம் அமைந்துள்ள மாவட்டம் எது?

1. கொழும்பு 2. அனுராதபுரம் 3. பொலன்னறுவை 4. கம்பஹா

20. கலா வாவியைக் கட்டிய மன்னன்.

1. மகாசேனன் 2. தாதுசேனன் 3. பண்டுகாபயன் 4. பராக்கிரமபாகு

21. மீனவர்கள் சிறுமீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது?

1. அத்தாங்கு 2. நாம்புவ 3. மடி 4. கரைவலை

22. தற்போது பதிவுத்தபால் அனுப்புவதற்கு செலவாகும் முத்திரையின் பெறுமதி.

1. ரூபாய் 25.00 2. ரூபாய் 35.00 3. ரூபாய் 30.00 4. ரூபாய் 15.00

23. இலங்கைத் தேசியக் கொடியிலும் தேசிய இலச்சினையிலும் காணக் கூடிய உருவம் யாது?

1. சிங்கம் 2. சூரியன் 3. அரசமிலை 4. சந்திரன்

24. துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்வதற்கு முன் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய துவிச்சக்கரவண்டியின் பகுதி.

1. மணி அடிக்கும் பகுதி 2. பின்பக்கச் சில்லுத்தடை

3. முன்பக்கச் சில்லுத்தடை 4. ஆசனம்

25. இலங்கையின் தேசிய விளையாட்டில் ஒரு குழுவில் பங்குபெறும் வீரர்களின் எண்ணிக்கை யாது?





1. 11 2. 12 3. 6 4. 5

26. “ஏலந்தண்டு ராமநாதா..... எனும் பாடல் எவ்வகைப் பாடலாகும்?

1. தோணிப்பாடல் 2. அரிவி வெட்டுப் பாடல்

3. வண்டி ஓட்டும் பாடல் 4. கும்மிப் பாடல்

27. கண்ணாடிப் பாத்திரமொன்றில் பனிக்கட்டி ஒன்றை இட்டு அப்பாத்திரத்தில் நீரை நிரப்பினால் அப்பனிக்கட்டியின் அமைவைச் சரியாகக் காட்டும் உரு.

1. 
2. 
3. 
4. 

28. பித்தளைப் பாத்திரங்களைத் துப்புரவாக்கி மினுக்குவதற்கு மிகவும் பொருத்தமானது எது?


1. தேங்காய்ப்பூ 2. பழப்புளி 3. விம்சோப் 4. உமி

29. “சிகிரியா” அமைந்துள்ள மாவட்டம் எது?

1. மாத்தளை 2. அம்பாந்தோட்டை 3. கொழும்பு 4. காலி

30. அடிப்படைத் தையலாக அமையாதது.

1. சோம் தையல் 2. விஸ்பம் தையல் 3. கம்பளித் தையல் 4. பெருநூலோடி

31. 

படத்தில் காட்டப்பட்டுள்ள மின்காந்தத்தில் குண்டூசியை அதிகம் கவருவதற்கு நாம் செய்யக் கூடிய வழிகளில் ஒன்று

1. மின்கலத்தின் அளவைக் கூட்டுதல்
2. குண்டூசியின் அளவைக் கூட்டுதல்
3. பிளாஸ்ரிக் வயரை இணைத்தல்
4. பெரிய ஆணியைப் பயன்படுத்துதல்

32. இலங்கைக்கு வருகைதந்த மேலைத்தேசத்தவர்களை ஒழுங்குமுறையில் காட்டும் தொகுதி.

1. ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர்
2. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்
3. ஆங்கிலேயர், ஒல்லாந்தர், அரேபியர்
4. போர்த்துக்கேயர், அரேபியர், ஒல்லாந்தர்

33. மொரட்டுவ பல்கலைக்கழக வேந்தராகவும் இங்கிலாந்து அரச வானியலாளர் கழக அங்கத்தவராகவும் விளங்கியவர் யார்?

1. C.W.W கன்னங்கரா 2. ஆதர் சி.கிளாக் 3. வண எஸ் மஹிந்த 4. டீ.பி.ஜயதிலக்க

34. இலங்கை குடியரசாகிய ஆண்டு எது?

1. 1972 2. 1948 3. 1815 4. 1952

35. பின்வருவனவற்றுள் கண்கள், காதுகள் ஊடாகத் தகவல் பெற உதவும் ஊடகம் எது?

1. அரங்கச் செயற்பாடு 2. வானொலி 3. பத்திரிகை 4. தொலைபேசி

36. உடலைப் பாதுகாக்கும் உணவுக் கூட்டம் எது?

1. வல்லாரை, மாம்பழம், கரட் 2. மீன், பருப்பு, இறைச்சி
3. மரவள்ளி, அவரை, சோயா 4. கரும்பு, கடலை, பசளி

37. அரச தகவல்களைப் பெறுவதற்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் எது?

1. 118 2. 1919 3. 119 4. 1929

38. இலங்கையின் வரலாற்றைக் கூறும் இலக்கிய நூல் எது?

1. விக்கிரமாதித்தன் கதை 2. பராக்கிரமபாகு கதை
3. வரகுண பாண்டியன் கதை 4. தெனாலி இராமன் கதை (30 x 1 = 30 புள்ளிகள்)

39. மேலே உள்ள படத்தினை அவதானித்து, ஐந்து சொற்களுக்கு குறையாமல், எழுவாய், பயனிலை, தொடர்பினை அனுசரித்து மூன்று வாக்கியங்கள் எழுதுக.



1. ..........................................................................................................................

..........................................................................................................................

2. ..........................................................................................................................

..........................................................................................................................

3. ..........................................................................................................................

..........................................................................................................................

(6 புள்ளி)

40. பின்வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

9082 : .... ................................................................................................................

41. பயணத்தை ஆரம்பிக்கும் போது ஒரு வாகனத்தின் மானியில் இலக்கங்கள் பின்வருமாறு பதியப்பட்டுள்ளது.

| 0 | 1 | 2 | 9 | 9 | 9 | km |
|---|---|---|---|---|---|---|


வாகனம் மேலும் 1km சென்ற பின் மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக்கூடுகளில் எழுதுக.

| | | | | | | km |
|---|---|---|---|---|---|---|

42. இவ்வெண்கோலத்திற்கு அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக.

*3035, 3025, 3015, ..................., ...................*


43. அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| **திண்மஉரு** | **முகம்** | **உச்சி** | **ஓரம் / விளிம்பு** |
|---|---|---|---|
|  | ------------- | 4 | ------------- |
|  | ------------- | ------------- | 12 |

44. 3, 5, 7, 9 என்னும் எண்களைப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக. (ஓர் எண்ணைப் பல தடவை பயன்படுத்தலாம்.)

I. 9 + .......... + .......... = 21

II. 3 + 5 - .............. = 1

45. 


மேற்படி படத்தில் பென்சிலின் நீளம் எத்தனை cm என எழுதுக. .....................................................

46. பின்வரும் தகவலைக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| சிவப்பு இனிப்பு | 1 |
| வெள்ளை இனிப்பு | 1 |
| | 12.00 |

| | |
|---|---|
| சிவப்பு இனிப்பு | 3 |
| வெள்ளை இனிப்பு | 2 |
| | 30.50 |

1. வெள்ளை இனிப்பு ஒன்றின் விலை யாது?.............................................

2. சிவப்பு இனிப்பு ஒன்றின் விலை யாது? .............................................

47. ஒரு பாத்திரத்திலுள்ள நீரிலிருந்து 6 லீற்றர் 250 மில்லி லீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 12 லீற்றர் 475 மில்லி லீற்றர் ஆகும். பாத்திரத்தில் முதலில் இருந்த நீரின் கனவளவு யாது?

..........................................................

48. பின்வரும் பின்னங்களைக் கூட்டுக. $\frac{2}{3} + \frac{1}{4} =$ ................

✧ **கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி 49 ஆம் , 50 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

49.

| | | |
|---|---|---|
| 32 | 16 | 58 |
| 45 | 34 | 76 36 |
| 40 | 38 | 24 |


மேற்குறித்த எண்களைப் பயன்படுத்தி 8 இன் மடங்குகளை அட்டவணையில் ஒழுங்குமுறையில் எழுதுக.

| 8 ன் மடங்கு |
|---|
| |
| |
| |
| |

50. பொதுவித்தியாசம் இரண்டாகவுள்ள எண் கோலமொன்றை 30 இலிருந்து 5 எண்கள் வரக் கூடியதாக அமைத்துக் காட்டுக.

.....................................................................................................................................................

51.




உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 9m எனில் பக்கம் AC யின் நீளம் யாது?

.................m ...................cm


52. விகாஸ் பாடசாலைக்கு வந்து 2 மணித்தியாலயம் 30 நிமிடம் செலவிட்ட பின் அங்கிருந்து பி.ப 3.00 இற்குப் புறப்பட்டான்.

1. விகாஸ் பாடசாலையிலிருந்து புறப்பட்டுச் சென்ற நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.................................................

2. விகாஸ் பாடசாலைக்கு வந்த நேரத்தை எழுதுக. ............................................................................

53. உருவின் சுற்றளவைக் காண்க.




..........................................

54.

| | | | |
|---|---|---|---|
| | | | கொழும்பு |
| | | காலி | 116km |
| | மாத்தறை | 45km | 161km |
| அம்பாந் தோட்டை | 77km | 122km | ............ |

அம்பாந்தோட்டையிலிருந்து மாத்தறை, காலி ஆகிய நகரங்களுக்கூடாக கொழும்புக்குள்ள தூரத்தைக் காண்க.

.................................................................................................... (15 x 2 = 30 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 06 இன் விடைகள்

**தரம் – 05** **6** **வினாத்தாள் – II**

01. *1. சுத்தம் பேணல் / நித்தம் நித்தம் சுத்தம் பேணல்*
*2. உடலில் உறுதி உடையவர்கள்*
*3. இன்பம்* *4. நித்தம் நித்தம்*
*5. நீ* *6. நோயாளி* *(6 புள்ளி)*

*02.அ) 1. வேலை* *2. பரந்து* *(2 புள்ளி)*

*ஆ) 1. மணிவிழா / வைரவிழா* *2. நடத்துநர்* *3. அந்தப்புரம்* *(3 புள்ளி)*

*03. 1. தயவுசெய்து எனக்கு ஒரு பேனை தாருங்கள்*
*2. மாலை வணக்கம்* *(4 புள்ளி)*

*04.* I Mango II. Umbrella *(2 புள்ளி)*

*05. அ)1. அப்பா வந்தாரா?*
*2. நாங்கள் பாடசாலைக்குப் போவோம்.*
*ஆ)*I. குருத்துமா II. சருங்கலய *(4 புள்ளி)*

*06. 1.* II *2.* I *3.* III *(3 புள்ளி)*

*07. 1. போருக்கு அழைத்தல்.* *2. மகிழ்ச்சி அடைதல்.* *(4 புள்ளி)*

*08. 1. சிறியதின் வலிமை (பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக)*
*2. பிற்போடக் கூடாது.* *(4 புள்ளி)*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *9.* | *1* | *17.* | *1* | *25.* | *3* | *33.* | *2* |
| *10.* | *3* | *18.* | *2* | *26.* | *1* | *34.* | *1* |
| *11.* | *2* | *19.* | *2* | *27.* | *3* | *35.* | *1* |
| *12.* | *1* | *20.* | *2* | *28.* | *2* | *36.* | *1* |
| *13.* | *1* | *21.* | *1* | *29.* | *1* | *37.* | *2* |
| *14.* | *2* | *22.* | *2* | *30.* | *3* | *38.* | *2* |
| *15.* | *1* | *23.* | *1* | *31.* | *1* | | |
| *16.* | *2* | *24.* | *2* | *32.* | *2* | | |

*(30 புள்ளி)*

*39. பொருத்தமான வாக்கியங்கள்* *(6 புள்ளி)*
*40. ஒன்பதாயிரத்து எண்பத்திரண்டு*
*41.* 013000 km
*42. 3005, 2995*
*43.* I. 4, 6 II. 6, 8
*44.* I. 9, 3
II. 7
*45.* 3.5cm
*46.* I. *வெள்ளை இனிப்பு 5.50*
II. *சிவப்பு இனிப்பு 6.50*
*47.* 18l 725ml / 18725ml
*48.* $\frac{11}{12}$
*49. 16, 24, 32, 40* *50. 32, 34, 36, 38, 40*
*51.* 3m 35cm
*52.* I. 15.00 *மணி* II. *பி.ப 12.30 மணிக்கு*
*53.* 48m *54.* 283km

**(உறுப்பெழுத்துக்கு 2 புள்ளி வழங்குக.)** (15 x 2 = 30 *புள்ளிகள்)*